SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேத பாதுகாவலன்

PAUPERES EVANGELIZANTUR

UNITAS SPIRITUS IN VINCULO PACIS

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

7 4-ம் புத்தகம் 20-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு வைகாசி மாசம் 26-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## முதற் தமிழ் ஆயர் அபிஷேக ஞாபக மலர்

### மிகவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அபிஷேகிக்கப்பட்டார்.

### கிறீஸ்து தேவராசாவுக்கு ஜே!

பரிசுத்த

பாப்பரசருக்கு

ஜே!



அருளப்ப

கியோமார்

ஆண்டகைக்கு

ஜே!

### மிகவந். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகைக்கு ஜே! ஜே!! ஜே!!!

வாழ்த்து

உலகம் அனைத்தும்
ஒருங்கே மெச்சிடும்
பெருமித யாழூர்ப்
பெருமறைத் தலைவ!
பெட்புடன் போற்றினோம்.
அற்புத அரசே!
நின்பதம் போற்றி!
நின்புகழ் போற்றி
நன்றுநீ ஆள்வாய்!

என்றுமே ஆள்வாய்
ஏதமில் எமிலியானுஸ்
ஏந்தலே போற்றி!
உன் திரு மக்கள்
உவந்திட வாழ்த்தினோம்.
தந்தனம் வணக்கம்
சிந்தையாய் ஏற்பீர்
வாழி! நீ வாழி! வழிவழி வாழி!!
வாழி! நீடுழி!! வாழி பல்லாண்டே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை

# யாழ்ப்பாண மேற்றிராணியார் வெள்ளி யூபிலிவிழாக் கொண்டாட்டம்

யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய மகாவந்தனைக்குரிய J. A. கியோமார் ஆண்டவர் அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகம்பெற்ற 25-வது ஆண்டு வெள்ளிவிழா கொழும்புத்துறைத் தாபனத்தில் சென்ற 14-ந்திகதி சனிக்கிழமை வெகு ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டது.

அன்று கொழும்புத்துறைத்தாபனம் என்றுமில்லாத ஒருபுதிய தோற்றத்தில் காட்சியளித்தது. கட்டிடங்களும் தெருவீதிகளும் வர்ணக்காகிதங்களினாலும் தோரணக் கூட்டங்களாலும் வெகுஅழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பகல் 4 மணியளவில் பலகுருப்பிரசாதிகளும் கன்னியாஸ்திரிமாரும் ஆசிரியகலாசாலை மாணவமாணவிகளும் சாதனுபாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பல பிரமுகர்களும், கத்தோலிக்கரும் நம் ஆண்டவர் அவர்களை வரவேற்குமுகமாக ஒன்றுகூடினர். ஒன்றுகூடிப் பாஷையூர்ச் சந்தியிலிருந்து மகாமேன்மைதங்கிய மேற்றிராணி ஆண்டவரவர்களையும், மகாவந். துணைமேற்றிராணியார் அவர்களையும்,பிரதமகுருவண.குருசாமிசுவாமிஅவர்களையும் ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் கலாசாலைமண்டபத்துக்கு அழைத்துவந்தனர். யூபிலிநாயகர் மண்டபத்தையடைந்ததும் ஆசிரியகலாசாலை மாணவர்களில் ஒருவர் மலர்மாலை சூட்டினார். அதைப் பின்தொடர்ந்து ஆசிரியகலாசாலை மாணவமாணவிகள் வாழ்த்துப்பாக்கள் பாடி ஆண்டவரை மகிழ்வித்தனர். இதன்பின் ஆசிரியமாணவர் ஒருவரால் ஆண்டவர் அவர்கள் கடந்த 25 வருடகாலமாக எமக்கு ஆற்றியசேவைகளையும் தொண்டுகளையும்பாராட்டி ஒரு வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. இன்னும் ஒரு ஆசிரியகலாசாலை மாணவியால் கலாசாலையின் போரால் ரூபா 1000 அடங்கிய பணப்பையொன்று மேற்றிராசனக்கோவில் கட்டிடநிதிக்கென ஆண்டவரவர்களுக்கு உபகரிக்கப்பட்டது. மேற்படி தொகை "பபியோலா" என்னும் நாடகமூலம்திரட்டப்பெற்றது.

மகாவந்.மேற்றிராணிஆண்டவர்அவர்கள் கொழும்புத்துறைத் தாபனத்தார் தமக்குக்காட்டிய நன்றிக்குப்பதில் நன்றிகூறி ஒருசிறு சொற்பொழிவு நிகழ்த்தினார். அது வருமாறு :

"இந்த 25 வருடகாலமும் எம்மை இந்தப் பொறுப்புவாய்ந்த பதவியில் அமர்த்தியமைக்குக் கடவுளுக்குத் தோத்திரம் சொல்லுகிறோம். இந்தப் பணஉதவியைப்புரிந்த உங்களுக்கும் எம்நன்றியை தெரிவிக்கின்றோம். குருமடத்துக்கு அடுத்தபடியாய் இருப்பது கத்தோலிக்க ஆசிரியகலாசாலை. குருமார்செய்யும் அப்போஸ்தல தொண்டுக்குப்பக்கபலமாக இருக்கவேண்டியவர்கள்ஆசிரியர்கள். ஆசிரியர்கள்குருமாருடன் ஒத்துழைப்பதினால்தான் அப்போஸ்தலதொண்டை முறையாய்ச் செய்யமுடியும்.

மாணவர்கட்கும் மற்றையோருக்கும் நன்முன்மாதிரியாக இருக்கவேண்டியவர்கள் ஆசிரியர்கள். எத்தனையோ குழந்தைகளின் நல்லொழுக்கத்தையும் வேத கல்வியையும் நிர்ணயிக்கும் பெரும்பொறுப்பு ஆசிரியராகியஉங்கள் கையில்தான்உண்டு. இதற்கு உங்களிடம் உயர்ந்தபாந்த நல்ல நோக்கம் தேவை. நோக்கத்தைப் பொறுத்ததே வேலையின்பயன். ஆகவே உங்கள் நோக்கம் நேர்மையானதாயிருக்க வேண்டியது மிகப்பிரதானமாகும். உபாத்திமைத்தொழில் ஒரு தேவ அழைத்தல். கடமைகளும்பொறுப்பும் வாய்ந்தவை. ஒரு வைத்தியனுடைய கடமையைப் பார்க்கிலும் ஒருஆசிரியனின்கடமை பொறுப்புக் கூடியது ஆசிரியன்பாடங்களைப்படிப்பித்தலினால் மாத்திரம் தன்கடமை நிறைவேறிவிடுமென நினைப்பது தவறு. நன்முன் மாதிரியாகவும் விளங்கவேண்டும்" என்பதுவே.

துணை மேற்றிராணியான மிகவந். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்களால்மிகவந்.கியோமார்ஆண்டவர்அவர்களின் ஐந்தடி உயரமான திருஉருவப் படம் திறந்துவைக்கப்பட்டு ஒருசிறு சொற்பொழிவுஆற்றப்பட்டது. அதுபின் வருமாறு: "நம்மேற்றிராணிஆண்டவர் யாழ்ப்பாணத்தில்; குருமடத்தை ஸ்தாபித்ததின்மூலமும், பலகல்விச்சாலைகளை நிறுவியதன்மூலமும் கத்தோலிக்க ஆசிரியசேனையை ஸ்தாபித்ததின்மூலமும்விசேஷமாகத் தோலகட்டியில் ஏற்படுத்தியிருக்கும் மௌனசபைமூலமும் நடத்திய சற்பிரசாத சமாகமமூலமும் தமது ஞாபகசின்னத்தை ஸ்தாபித்திருக்கிறார். ஆனதால் வேறு ஞாபக சின்னங்கள் வேண்டியது அவசியமல்ல. என்றாலும் ஆண்டவர் அவர்கட்கு ஆசிரியகலாசாலையார் தங்கள் நன்றியைக்காட்டும் முகத்தால் இந்தஞாபக சின்னத்தை ஏற்படுத்தியது வரவேற்கத்தக்கது. இன்னும் இது போன்றஒரு வரவேற்பு இதுவரை ஆண்டவர்அவர்கட்குநடைபெறவில்லை. நடைபெற்றவற்றுள் இதுவே சிறந்தது" எனக்கூறி, முடித்தார்.

பின்னர் தாபனத்து விளையாட்டு மைதானத்தில் மகாவந். மேற்றிராணியாண்டவர் முன்னிலையில் ஓர்சிற்றுண்டிவிருந்து நடைபெற்றது. பெருந்தொகையான பிரமுகர்கள் மேற்படி விருந்தில் கலந்துகொண்டனர். சிற்றுண்டிவிருந்து வைபவத்தின் போது, சைவப்பெரியாரும், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபருமாகிய திரு. வீரசிங்கம், B. A. அவர்களால் ஒரு சிறு சொற்பொழிவு நடத்தப்பட்டது. அதில் "நான் ஒருசைவனாயிருந்தும் கத்தோலிக்கசமயத்தின் ஒழுங்குக்கிரமத்தையும், குருமார், கன்னிகாஸ்திரிகளின் தன்னலமற்றதொண்டையும், கண்டுவியப்புறுகிறேன். இவர்களை இயக்கும் இரகசியசக்தியை இன்னும் என்னால் அறியமுடியாமலிருக்கிறது. என்னுடைய சமயத்திலும் இப்படி இருந்தாலோ என்று ஆசைகொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

இதன்பின். திரு. R. J. போல் அவர்கள் ஒரு குறிப்புரைகூறினார். அதில்: மகாவந். மேற்றிராணியாண்டவரவர்கள் கல்வித்துறையிலும், குருமடம் அமைப்பதிலும், மீசாம்களைப்பராமரிப்பதிலும் தம்மால் எவ்விதம் பாடுபடமுடியுமோ அதுவரைபாடுபட்டு அவற்றின் முன்னேற்றத்திற்காக உழைத்திருக்கிறார். ஆனடியால் நாமெல்லோரும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளோம்" எனக்கூறி முடித்தார்.

அதன்பின்னர் மகாவந். மேற்றிராணியாண்டவரவர்கள் சபையோருக்கு நன்றிகூறினார். இருபத்தைந்து வருடத்திற்கு மிகவும் பொறுப்புவாய்ந்த இப்பதவியைஎமக்குத்தந்ததற்காகக்கடவுளுக்குத்தோத்திரம் சொல்லுகிறேன். நாம் வந்தகாலத்திலும்பார்க்க இப்போது கத்தோலிக்கரிடையேயும் பிறரிடையேயும் நிலவும்சகோதரத்துவத்தை கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன். இப்படியான சகோதரத்துவம் இன்னும் வளர்ந்துநீடிக்குமாயின் உங்கள் நாட்டின் நன்மைக்கு இதுவே ஒரு கருவியாயிருக்கும். கத்தோலிக்கர்களாகிய நாம் பிறரிடமிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம். அதற்காக நாம் பிறருடன் ஒற்றுமையாயிருக்கப் பிரயாசப்படல்வேண்டும். இதற்கு இப்படிப்பட்டசந்தர்ப்பங்களே தக்கசாதனங்களாகும். நாம் எம்மால் கூடியவரையும் எங்கள்சமயத்திற்கும் நாட்டின் நலனுக்கும், பரஸ்பரநல்லுறவை எல்லோரிடமும் வளர்ப்பதற்கும் முயற்சித்துள்ளோம். அதேபோல் எம்பின்னே வருபவரும் செய்வார்என எதிர்பார்க்கிறேன் எனக்கூறிமுடித்தார். இதன்பின் பத்திரசம் ததும்பும் 'பபியோலா' நாடகம் ஆசிரியகலாசாலை மாணவிகளால் திறம்பட நடித்துக்காட்டப்பட்டது.

# எல்லாம் நன்மைக்குத்தான்

(முன்தொடர்ச்சி)

அமிர்தத்தின் கணவன் ஏதோ நல்ல வேலையாக ஒன்றும் கூறாமல் தன் வீட்டுக்குவந்தான்.வாயிற்படியில்நின்றுகொண்டு 'அந்த மனிதனுக்கு என்ன அகம்பாவம்? என்மனைவிக்குச் சோறுபோட எனக்குத் திராணி இல்லை என்று நினைத்துக்கொண்டானா? அவன் கிடக்கிறான் மடைப்பயல். அமிர்தம், நீ இனிமேல் அந்தவீட்டு வாசற்படியில் மிதிக்கக்கூடாது. அவர்களும் நம் வீட்டுவாசற்படியில் மிதிக்கக்கூடாது' என்று முழங்கினான். மனஸ்தாபம் அவ்வளவு பிரமாதமாக இராவிட்டாலும் அவர்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லை. இவ்விதமாக மாதங்கள் பல கடந்தன. அண்டைஅயலில் உள்ளவர்கள் சுசீலாவிடம், அமிர்தம் கர்ப்பமாயிருக்கிறாள்' என்று சொன்னார்கள்.

சுசீலா உடனே தன் கணவனிடம், 'கேட்கிறீர்களா! அமிர்தம் கர்ப்பமாயிருக்கிறாளாம். நாம் தாம் அவளைத் தலைப்பிரசவத்திற்கு அழைக்கவேண்டியது. என்ன சொல்லுகிறீர்கள்? கூப்பிடலாமா?' என்று கேட்டாள்.

'என்னடி உளறுகிறாய்? நம்மோடு இருந்தால் நன்றாய்த்தானிருக்கும். எல்லாச் சிறப்புகளையும் செய்தோம். இதையும் செய்யாமலா விடுவோம். அவள்தான் நம்மைக் கண்டாலும் காணாதவள்போல் போய்விடுகிறாளே. நாம் என் செய்வது? எதற்கும் நீ மெதுவாக அவளுக்கு நமது வீட்டுக்கு வரவிருப்பந்தானா? அமலநாதன் என்ன சொல்லியிருக்கிறான் என்று விசாரித்துப்பார்!' விசாரியாமல் என்ன? எல்லாம் விசாரிச்சாச்சுது. நமது வீட்டு வாசற்படியில் கால்எடுத்து வைக்கக் கூடாது என்று அமிர்தத்தின் மாப்பிள்ளை கட்டளையிட்டிருக்கிறாராம். பிரசவத்துக்கு ஆஸ்பத்திரியில் ஏற்பாடு செய்திருக்கிறாராம். எப்படியாயினும் சரி, ஒரு பொல்லாப்பின்றிப் பெற்றுப் பிழைத்துத் தாயும்பிள்ளையும் சுகமாயிருந்தால்போதும். 'நம்மால் என்ன செய்யமுடியும்? கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர்மேல் பாரத்தைப்போட்டு இருப்போம்' என்றார் சுசீலாவின் கணவர்.

தாய் ஆகப்போகும் அமிர்தத்தின் உள்ளத்தில் அன்புமலர்ச்சிபெற்றது. துன்பநினைவுகளும் சோர்வும், பயமெல்லாம் அந்த அன்பில் மறைந்தன. மாதங்கள் சிலசென்றன. அமிர்தம் ஒரு ஆண்குழந்தைக்குத் தாயானாள். இவ்வளவுகாலமும் அவள் கணவனோடு வேடிக்கையாகக் காலங்கழித்துவந்தாள். இப்பொழுது தாய் என்னும் உன்னதபதவி அவளைத்தேடி வந்திருக்கிறது. அதை அவள் உணர்ந்ததும், 'ஐயோ!' குழந்தைக்குக் குளிப்பாட்ட எனக்குத் தெரியாதே! அதற்கு ஏதேனும் நோய்நொடிகள் வந்தால் என்ன செய்வது! அக்காளுடனிருந்தால் எனக்கு இந்தக்கவலைஎல்லாம் எதற்கு? அவளையும் பகைத்துக் கொண்டோமே! என்று உள்ளத்தே வருந்தினாள். அமலநாதனுக்கு அதைப்பற்றி ஒரு கவலையுமில்லை. தான் இப்பொழுது ஒருதகப்பன். தனக்கு யார் தயவு வேண்டும்? வீடுவாசல் இருக்கிறது; ணைபுள்ள மனைவி இருக்கிறாள்; அருமைக் குழந்தை இருக்கிறது; கைநிறையப் பணம்உண்டு என்று யாரையும் சட்டைபண்ணாமலிருந்தான்.

அமிர்தம் குழந்தையை கோவிலுக்கோ, அல்லது வெளியே செல்லும் போதோ எடுத்துக்கொண்டு செல்வதைச் சுசீலாவும் சுந்தரும் சாடையாகப் பார்த்தார்கள். அப்பொழுதெல்லாம்சுசீலா 'குழந்தையைப் பாருங்கள்; கிளி மாதிரி இருக்கிறான். அமிர்தத்தைஉரித்து வைத்ததுபோலிருக்கிறது' என்று கணவனிடம் சொல்வாள். 'என்னடி' உனக்குக் குழந்தை என்றாலே உயிர். நாம் என்ன செய்வது? குழந்தை நன்றாய்த்தானிருக்கிறான் அவன் வளர்ந்து வாலிபமாகட்டும். நம்மிடம்வராமல் போய்விடுவானா? அப்பொழுது கண் குளிரப்பார்த்துக் கொள்ளலாம்' என்பார் அவர்.

'வாழ்க்கையில் இன்பமும் இன்னலும் சுழன்றுவருவது இயல்பு. நன்றாய் விளையாடிக்கொண்டிருந்த அமிர்தத்தின் குழந்தைக்குக் காய்ச்சல்கண்டு படுத்தபடுக்கையாகக் கிடந்தது? கண் திறந்து பார்க்கவில்லை. சிரித்து விளையாடிமகிழும் குழந்தை படுத்தபடுக்கையாய்க்கிடக்க வீடு களையற்றுவறண்ட பாலைவனம்போல் இருந்தது. 'அக்காள் வீட்டிலிருந்தால் இவ்வளவு கவலையில்லையே! குழந்தைக்கு என்ன செய்யுமோ, ஏது செய்யுமோ? பயமாயிருக்கிறதே என்றாள் அமிர்தம்.

'உனக்குக் கொஞ்சங்கூடத் தைரியம் இல்லை. என்னை என்ன செய்யச்சொல்லுகிறாய்? உன் அக்காளை வேண்டுமானால் போய்க்கூட்டிக்கொண்டு வா' என்று சீறி விழுந்தான் அமலநாதன். உள்ளங்கவர்ந்தெழுந்த பெருந்துயரத்துடன் அமிர்தம் கண்களில் நீர்த்துளிகள் தேங்க, தன் அக்காள் வீட்டுக்குள் நுழைந்தாள். 'அக்கா! அக்கா!! நாங்கள் செய்ததையெல்லாம் மன்னித்துவிடு' என்று பொருமிப் பொருமி அழுதாள். 'அடஅசடே' ஏன் அழுகிறாய்? காரியத்தைச் சொல்' என்று அன்னையின் அன்பொழுகும் குரலில் கூறினாள்சுசீலா.

'அக்கா' குழந்தைக்கு காய்ச்சல்கண்டிருக்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை; பயமாயிருக்கிறது. அவர்கள் உன்னை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்கள். அக்கா, சீக்கிரம் வந்து குழைந்தையைப்பார்' என்று சொல்லுகையில் அவள் தொண்டை கரகரத்தது.

'சரி வா; போய்ப்பார்ப்போம்'என்று கூறி அவளை அழைத்துக் கொண்டு போனாள். அவள்போனதும் தொட்டிலில்கிடந்த குழந்தையை எடுத்துமடியில்கிடத்தினாள். குழந்தையின் கையைத்தொட்டுப் பார்த்தாள். 'அம்மா, ஒன்றும்பயப்படாதே. இது ஜலதோஷம். கொஞ்சம் காரமாய் மருந்து கொடுத்தால்போதும். வேறொன்றும் செய்யவேண்டாம்' என்று சொன்னாள் அவள். அமிர்தம் உடனே மருந்தைத் தயாரித்துக்கொடுக்க, சுசீலா குழந்தைக்குமருந்தைப் புகட்டினாள். சிறிது நேரத்தில் குழந்தை கண்விழித்துப் பார்த்தது.

இதுவரையும் மௌனமாய்நின்ற அமலநாதன், 'மதினி, ஏதோ சிறுபிள்ளைப் புத்தியால் நான் செய்ததையெல்லாம் மறந்துவிடுங்கள். இனிமேல் குழந்தை உங்கள் பொறுப்பு. நீங்கள்தான் அவனைக் கவனித்துக் கொள்ளவேண்டும்' என்றுகூறினான். 'மைத்துனரே, கடவுள்எல்லாம் நன்மைக்குத்தான் செய்வார். உங்களுக்கு இனிமேல் குழந்தையைப்பற்றியே கவலைவேண்டாம்' என்றுகூறிக் குழந்தையைத் தன்மார்போடு அணைத்துக் கொண்டாள் சுசீலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனிமாதம் திருஇருதய வணக்கமாசம்

"மனுமக்களோடுகூட இருக்கிறதே நமக்குப்பிரியம்" (உவமையாகமம் 8. அதி.) "மரியாயின்வழியாய் யேசுவிடம் செல்" என்று வேதசாஸ்திரியான அர்ச். பெர்நர்து வசனிக்கிறார். "மரியாயின் திருவயிற்றின் கனியாகிய திவ்வியயேசுவைச்சுகித்து அனுபவிக்க விரும்புகிறவர்கள், உன்னத பரமவிருட்சமாகிய பரிசுத்த கன்னிமரியாயியிடம் செல்வார்களாக" என்று அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் சொல்லுகிறார். சர்வேசுரனுடைய பரிசுத்தமாதா, மனுக்குலத்தின் மாதாவென்றும், அந்தமாதாவின் அடைக்கலத்தைத் தேடிஅடைவது, நமது ஆத்தும இரட்சணியத்தை அடைய ஏற்ற வழியென்றும் மாதாவின் மாதமாகிய வைகாசி வணக்கமாதத்தை மிகுந்தபத்திச் சிறப்போடு கொண்டாடினோம். இம்மாதம் யேசுவின் திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். இந்தமாதத்தில் மாதாவின் திருக்குமாரனாகிய திவ்வியயேசுவினிடம் செல்லவேண்டும்.

இருதயமானது சிநேகத்தின் அடையாளம். யேசுவின் திருஇருதயம் தேவனின் இருதயம். தெய்வீகமும் மனுஷீகமும் ஏக ஐக்கியமாயிருக்கின்ற தேவகுமாரனாகிய தேவஇரட்சாமூர்த்தியின் மகத்தான மகாஆராதனைக்குரிய திவ்விய இருதயம். யேசுவின் திருஇருதயத்துக்கு இவ்வுலகமனுஷர் ஒவ்வொருவர் பேரிலும் உள்ளசிநேகம் அணைகடந்தசிநேகம். நம்மைப் பாவத்தில் நின்று கழுவிப்பரிசுத்தப்படுத்தி மீட்டிரட்சிக்கும் தேவ உதிரத்தின்ஊற்று. மனுக்குலத்துக்காகத் திவ்வியயேசு தமது பரம பிதாவைநோக்கி எக்காலமும் இடைவிடாமல் பிரார்த்தித்துக் கொண்டுவருகிறார். அவருடைய திருஇருதயத்தில் சுவாலித்தெரியும் இந்த அளவிறந்த தேவசிநேகத்தை நாம் அறிந்து, ஆராதித்து, சிநேகத்துக்கு சிநேகம் காட்டுவதுதான் திருஇருதயப்பத்தியாகும். நமது ஆண்டவர், அர்ச். மார்க்கரீத்மரியம்மாளுக்குத் தமது இருதயத்தைக் காண்பித்துத் திருவுளம்பற்றினதுபோல், நம்மையும்நோக்கி: மனிதர்களை அத்தியந்தவிதமாய்ச் சிநேகிக்கும் இந்த இருதயத்தைப்பாருங்கள், உங்களை இந்த இருதயம் எம்மாத்திரம் சிநேகிக்கிறதென்றால்; அது உங்கள் விஷயமாய்ச் செய்யாமல்விட்டது என்ன? இந்தச் சிநேகத்துக்குப்பதிலாக அநேகர் நமக்கு நிந்தை அவமானத்தை வருவிக்கிறார்கள். நன்றியறியாமையும், அசட்டைத்தனமும், அவமரியாதையுமே அவர்கள் நமக்குச்செய்யும் பிரதிநன்றி. நமது சிநேகத்துக்குப் பதில்சிநேகம், கொஞ்சமென்கிலும் காட்டுவார்களேயாகில், நாம் அவர்களுக்காகச் செய்தது, பட்டது சகலமும் ஒன்றுமில்லையென்று எண்ணுவதோடுகூட, வேண்டுமானால் இன்னும் அதிகமாய் அவர்களுக்காகப் பாடுபடவும் தயாராயிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்று நமக்கிருக்கும் அணைகடந்த ஆசையை அலட்சியம் செய்கிறார்கள். மகனே, மகளே, நீயாகிலும் அவர்களுடைய நன்றிகெட்டதனத்துக்குப் பரிகாரமாக, நமக்குச்சற்று ஆறுதல் வருவிக்கமாட்டாயா? என்று நம்மில் ஒவ்வொருவரையும் கேட்கிறார். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நமது இருதயத்தை அவருக்குப் பாதகாணிக்கையாக ஒப்புக்கொடுத்து, ஓ! சிநேகப் பிரளயமான யேசுவின் திருஇருதயமே! உமது பரிசுத்த திருஇருதயத்தினின்று புறப்படும் அன்பின் அக்கினியை எங்கள் இருதயத்தில் மூட்டியருளும்சுவாமி. ஓ! அன்பே! கரைகாணாஅன்பே! நீர் எங்களுக்காகப் பாவியிலும் பாவியாய் மதிக்கப்பட்டு, சகலநிந்தை அவமானங்களினால் நிறையப்பட்டு, சகலவாதை வருத்தங்களினால் பீடிக்கப்பட்டு உமது விலைமதிக்கப்படாத திருஇரத்தமெல்லாம் சிந்தி, கடைசியாய் உமது பரிசுத்த சீவனையும் எங்களுக்காகப் பலியிட்டது போதாதென்று, உலக முடிவுபரியந்தம் எங்களோடு வீற்றிருக்கவும் சித்தமானீர். இன்னமும் உமது அன்பு இத்தோடு முடியவில்லையே! ஓர் சிறு அப்பத்துண்டில் உமது தெய்வீக முழுமையும் மறைத்துக்கொண்டு, இராப்பகலாய் அதிலிருந்து, உமது எண்ணிறந்த வரப்பிரசாதங்களினால் எங்களைநிரப்ப "வருந்தி" சுமை சுமக்கிறவர்களே நீங்களெல்லோரும் என்னிடம் வாருங்கள்! நான் உங்களைத்தேற்றுவேன்" என்னும் அமிர்தவசனங்களினால் அன்புடன் அழைக்கிறீர்.

திருஇருதயபக்தர்களே, நமது ஆண்டவருடைய நேசஅழைத்தலுக்குச் செவிகொடுத்து அவருடைய திருச்சமூகத்தில்போய், நமது நிர்ப்பாக்கியங்களையெல்லாம் அவரிடம்சொல்லி, திவ்விய நற்கருணைப்பெட்டியில்வீற்றிருக்கும், அவரிடம் நம்பிக்கையோடு நமக்கு வேண்டிய உபகார சகாயங்களைக் கேட்டு இரந்து மன்றாடுவோம்.

யேசுவின் திருஇருதயம், நாம் உயிரோடிருக்கும்போதும் விசேஷமாய் நமதுமரணசமயத்திலும் தவறாத அடைக்கலமாயிருக்கும்.

"நமது திருஇருதயத்தின் பேரில் பத்தி மற்றவர்களிடத்திலும் உண்டாகப் பிரயாசப்படுகிறவர்களின் நாமங்களை நமது திருஇருதயத்தில் ஒருக்காலும் அழிக்கப்படாதவிதமாய் அச்சுப்போலப்பதிப்பிப்போம்" என்று திவ்வியயேசு தமது திருஇரக்கத்தினிமித்தம்வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

ஆகையால் இத்திருஇருதயப் பத்தியை மற்றவர்களிடத்திலும் பரவச்செய்வதோடு, நாம் இத் திருஇருதய வணக்கமாதத்தைத் தக்கபத்தி சிரவணத்தோடு கொண்டாடித் திருச்சபையால் இந்த வணக்கமாதத்தைக் கொண்டாடுகிறவர்களுக்கு அளிக்கப்பட்ட விசேஷபலன்களை அடையப் பிரயாசப்படுவோமாக.

இனிச் சீவிக்கிறது நானல்ல, யேசுதான் அவரிடத்தில் அவரோடு வேலைசெய்கிறேன். வருத்தப்படுகிறேன், சிநேகிக்கிறேன் என்று உண்மையாய்ச் சொல்லக்கூடுமாகில் நமது பாக்கியமே பாக்கியம்.

"யேசுவின் திருஇருதயமே, உம்முடைய இராச்சியம்வருக! இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்த குணமுமுள்ள யேசுவே! என் இருதயம் உமதுதிருஇருதயத்தைப்போல் ஆகும்படிசெய்தருளும்." ஆமென் யேசு.

M. S. பிள்ளை
வடக்கன் குளம்.

# மருதமடுப் பதியில் யூபிலித் திருவிழா

## 1949-ம் ஆண்டு ஆனிமீ 23-ந்உ தொடக்கம் ஆடி மாசம் 2-ந் திகதிவரையும்

ஆனிமாசம் 23-ந் திகதி சாயந்தரம் 5 மணிக்கு திருச்செபமாலை நாயகியின் துவசாரோகணம்.
இரவு 7-00 மணிக்கு ஒவ்வொருநாளும் செபமாலை, பிரசங்கம், சற்பிரசாத ஆசீர்வாதம்.
,, 26-ந் திகதி மேற்றிராணியாண்டவர் அவர்களால் மாலை ஆராதனை.
,, 27-ந் திகதி காலை 7-00 மணிக்கு மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் பாடற்பூசை சொல்லப்பெற்று திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முதலாம் திருவிழா [illegible]டிவாகும்.
,, 27-ந் திகதி தினமும் 9-30 மணிக்கு ஒவ்வொரு [illegible]காரணிக்கத்தின் விளக்க உரையுடன் செபமாலை தமிழில் செபிக்கப்படும்.
,, 28-ந் திகதி முற்பகல் 11-00 மணிக்கு மேற்சொன்னபடி ஆங்கிலத்தில் விளக்க உரையுடன் செபமாலை ஓதப்படும்.
,, 29-ந் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு மேற்படி விளக்க உரையுடன் சிங்களத்தில் செபமாலை ஓதப்படும்.
,, 30-ந் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு [illegible]மிழிலும் சிங்களத்திலும் தர்க்கப்பிரசங்கங்கள் செய்யப்படும்.

### பச்சாத்தாப சுற்றுப்பிரகாரம்

**29-ந் திகதி சாயந்தரம் 4-30 மணிக்குப் புறப்படும்.**

#### சுற்றுப்பிரகார ஒழுங்குகள்

சுற்றுப்பிரகார அணிவகுப்பில் தமிழ்வர்க்கத்தைச் சேர்ந்த யாத்திரிகள் செபமாலை மாதாவின் திருச்சுரூபத்துக்கு முன்னதாகப் புறப்படுதல் வேண்டும். சிங்களவர்க்கத்தைச் சேர்ந்த யாத்திரிகள் திருச்சுரூபத்துக்குப் பின்னால் செல்லவேண்டும். சுற்றுப்பிரகாரம் தொடங்கும்பொழுது கீர்த்தனைகள் பாடப்படும். சுற்றுப்பிரகாரவேளையில் எல்லோரும் பக்தியுடன் செபமாலை ஓதுகிறதுடன் சிலகாரணிக்கங்கள் சொல்லும்பொழுது தவத்தின் அடையாளமாக இருகைகளையும் விரித்தபடியே சொல்லுதல் வேண்டும். சத்தம் சந்தடிகள் ஆர்ப்பாட்டங்கள் ஒன்றும் சுற்றுப்பிரகார வேளையில் நடைபெறக்கூடாது. துவக்கு வெடிகள் பாட்டாசுகள் முதலியயாவும் முற்றாக விலக்கப்பட்டிருக்கின்றன. யாத்திரிகள் எல்லோரும் திருச்சுரூபத்தைச்சுற்றி வட்டமிடாமல் பக்திக்குரிய சுற்றுப்பிரகார அணிவகுப்பாய்ச் செல்லுதல்வேண்டும்.

திருச்சுரூபம் முற்றவெளிக்கு வந்தவுடன் ஆர்ப்பரிப்புக் கீர்த்தனங்கள் பாடப்படும்.

### மரியாயின் இரவு

**ஆனி மாசம் 30-ந் திகதியும் ஆடி மாசம் 1-ந் திகதியும்**

ஆனிமாசம் 30-ந் திகதி இரவு 10 மணிக்கு செபமாலை நாயகியின் திருச்சுரூபம் தேவாலயமுகப்பில் எழுந்தேற்றம் செய்யப்பெற்று தமிழில் ஒவ்வொரு காரணிக்கங்களின் வியாக்கியானத்துடன செபமாலை செபிக்கப்படும்.
,, இரவு 11-30 மணிக்கு திருமணித்தியாலம்.
,, ,, 12-30 ,, வந்தனைக்குரிய டக்டர் J. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் அவர்களால் திவ்விய பூசைப்பலி வியாக்கியானத்துடன் சொல்லப்படும்.
ஆடிமாசம் 1-ந் திகதி இரவு 10-00 மணிக்கு ஆலயமுகப்பில் சிங்களத்தில் வியாக்கியானத்துடன் செபமாலை சொல்லப்படும்.
,, இரவு 11-30 மணிக்கு திருமணித்தியாலம்.
,, ,, 12-30 ,, சலாப மேற்றிராணியாரான வந்தனைக்குரிய டக்டர் எட்மண்ட் பீரிஸ் ஆண்டவர் அவர்களால் சிங்களத்தில் வியாக்கியானத்துடன் திவ்விய பூசைப்பலி சொல்லப்படும்.

---

ஆடிமாசம் 1-ந் திகதி காலை 9-30 மணிக்கு யூபிலி ஞாபகார்த்தமாகக் கட்டப்படவிருக்கும் ஞானஒடுக்க மண்டபத்துக்கு அஸ்திபாரக் கல் நாட்டப்படும்.
காலை 9-45 மணிக்கு யூபிலி நாயகருக்கு வாழ்த்துப்பத்திரம் வாசிக்கப்படும்.
மாலை 7-00 மணிக்கு செபமாலை பிரசங்கம் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெற்றபின்னர் மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் வேஸ்பர் ஆராதனைபாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம் கொடுக்கப்படும்.
ஆடிமாசம் 2-ந் திகதி காலை 7-00 மணிக்கு மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் பாடற்பூசை சொல்லப்பெற்றபின்னர் பக்திவிநயத்துடன் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெறும். சுரூபம் முகப்பை அடைந்ததும் சந்தோஷ ஆர்ப்பாட்ட தோத்திரங்களுடன் திருநாள் முடிவுபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### சீமேந்துத் தொழிற்சாலை

இத்தொழிற்சாலையில் வருகிற ஆவணி மாசம் சீமெந்து ஆக்கும்வேலை ஆரம்பிக்கப்படுமென முன்னர்த் தெரிவிக்கப்பட்டது; ஆனால் இந்த 1949-ம் ஆண்டின் ஈற்றிலேதான் சீமெந்து ஆக்கும்வேலை தொடங்குமென இப்பொழுது அறியக்கிடக்கிறது; இத்தொழிற்சாலையைக் கொண்டு நடத்துவதற்கான திறமைவாய்ந்த "எஞ்ஜினியர்" இலங்கையில் அகப்படாமையால், இப்பொழுது வேற்றுநாட்டிலிருந்துஒருவரைத் தருவித்தற்கு அதிகாரிகள் யோசிக்கின்றனராம். அப்படிப்பட்டவருக்கு வருடமொன்றுக்கு வேதனம் 1200 பவுணும்; ஐந்துவருடத்திற்கு இத்தொழிற்சாலையிற் கடமைபார்ப்பதாக அவர் தம்மைக்கட்டுப்படுத்திக்கொடுக்க வேண்டுமாம்.

### வெங்காய இறக்குமதி

இலங்கையிற் சிலகாலமாக வெங்காயம் விலையேறிக்கொண்டது; இலங்கைக்கென 3000 தொன் நிறைகொண்டவெங்காயம் இந்தியாவில் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறதாம்; இதில் 300 தொன் வெங்காயம் இப்பொழுது கொழும்பில் இறக்குமதியாயிற்று; எஞ்சியதொகையும் வருகிற ஆனிமாசம் முடிவதற்கிடையில் இங்கு வந்துசேருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய ஆயரைப் —— போற்றுவோம்!

1949-ம் ஆண்டு மாதாவின் வைகாசி மாதம். 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மிகவந்தனைக்குரிய எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள், யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் துணைஆயராக அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார்கள்!

வீரத்தமிழ் மன்னர் அரசுசெலுத்திய நல்லூராகிய யாழ்ப்பாணத்திலே, நம்சத்தியமறையின் முதல் தமிழ்இராசகோமகனாக எமிலியானுஸ்ஆண்டவர் அவர்கள் முடிசூட்டப்பட்டுள்ளார்கள்!

யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த சங்கிலி என்னும் மன்னன், தன்மகன் சத்தியமறையைத் தழுவியதினால் அவனைக் கொன்று வேதசாட்சியாக்கினான். அந்தஅரசகுமாரனின் புனிதசடலம் அடக்கம்செய்யப்பட்டபோது நடைபெற்ற அற்புதம் சரித்திரப் பிரசித்தமானது இந்தஅறபுதம் நடந்த அதேஇடத்தில்,—மிகுஅலங்கார பிரமாண்டமானதாய்க் கட்டியெழுப்பப்பட்டுவரும் கொஞ்சேஞ்சித்தாயாரின் சேதிமத்திலே,—திவ்விய இஸ்பிரீத்துசாந்து தேவனின் பூரணவரங்களால் நிரப்பப்பட்டு—யாழ்ப்பாணக் கத்தோலிக்கரின்மேல் திராணியுள்ளவராக—யாழ்ப்பாண மந்தையின் புதிய கோபாலராக,—எங்கள் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள்!

தற்போது உலகிலுள்ள அறுபதுகோடிக்கு மேற்பட்ட கத்தோலிக்கர்களைத் தனியாட்சி செய்துவரும், யன்னதிமன்னன் பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசரின், ஞானசக்கிராதிபத்தியத்தில் ஒளிரும் இலங்கை ஆதிபத்தியத்தில், ஆதியாயுதித்த யாழ்ப்பாணச் சமஸ்தானத்துக்கு, வந். எமிலியானுஸ்ஆண்டகை அவர்கள் இராசகோமகனாக—சமயஇளவரசனாக முடிசூட்டப்பட்டுள்ளார்கள்!—தெரிந்தனுப்பப்பட்டவர்களான அப்போஸ்தலர்களின் வரிசைக்கிரம சந்ததிவழியில்—நரகத்தின்வாசல்கள் மேற்கொள்ளாத கற்பாறையின் பிரத்தியட்ச தலைவர்களான பாப்புமாரின் வழித்தோன்றலாய்—யாழ்ப்பாணப் பாப்புவாகிய அருளப்ப கியோமார் ஆண்டவரின் உடன் சகோதரராய் விளங்க எங்கள் எமிலியானுஸ்பிள்ளை ஆண்ட்வர் அவர்கள் உரிமையும் தகுதியும் அடைந்திருக்கின்றார்கள்!

யுத்தசபையாகிய எம்மறையின் யாழ்ப்பாண யுத்தகளத்திலே, ஞானப்போராட்டத்தை வீரதீரமாகவும், தீவிரமாகவும், முன்னின்று, தொடர்ந்து நடத்துவதற்கு—வந். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள், புதிய சமயசேனாதிபதியாக வேத உத்தியோகமுறையில் நியமிக்கப்பட்டு—இப்போது பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள்! யாழ்ப்பாண மேற்றிராசனமாகிய இளநங்கைக்கு, ஞானரீதியில் உறுதி வார்த்தைப்பாடு கொடுத்து—பல பெரியோர்கள் மத்தியில், திருச்சபையைஆனந்தமாகக் கைப்பிடித்து, ஞான மனைவியாக ஏற்றுக்கொண்டு திருச்சபையின் பொற்கணையாழிபெற்று—சம்பூரண குருத்துவ லட்சண உடுமானங்களையும்உரிமைகளையும்பெற்று—வந். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் உன்னத ஞானப் பிதாவாக்கப்பட்டுள்ளார்கள். முன்னொருகால் சாமுவேல் என்னும் மகாத்மாவினால் தாவீதுராசாவாகிய தீர்க்கதரிசியானவர் அபிஷேகிக்கப்பட்டதுபோன்று, யாழ்ப்பாண மகாத்துமாவான எங்கள் அருளப்ப கியோமார் மேற்றிராணியாரால் ஞானதீர்க்கதரிசியான எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் அபிஷேகிக்கப்பட்டுள்ளார்கள்.

இங்ஙனமாய், தமிழ்மக்கள் வதியும் நம்மேற்றிராசனத்துக்கு—தமிழ்இரத்தமும், தமிழ்என்பும், தமிழ்த்தசையும், தமிழ்ப்பண்பும்பூண்ட—தமிழ்ப்புத்திரனாகிய பெருமாண்புமிக்க எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள்—புதிய கோபாலராய்—ஞான அதிகாரியாய்—மேல்திராணியாராய் அபிஷேகிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து நாம் கட்டுமட்டில்லாப் பேருவகைகொண்டு இவர்களை முழுஉள்ளன்போடும் ஆனந்த சந்தோஷத்தோடும் வரவேற்கின்றோம்!

யாழ்ப்பாண முதல் தமிழ் ஆயரே! வருக! வருக!! யாழ்ப்பாண நகரியே! மகிழ்ச்சிகொள்வாயே! ஏனெனில் உனது சொந்தத்தவப்புதல்வன்—உரிமைமகன் ஒருவன்—கண்ணியமிக்க சமயத்தின் முதல்மேல்அதிகாரியாய் வந்த பாக்கியத்தைக் கண்டுகொண்டாய்!

யாழ்ப்பாண மந்தையின் ஆடுகளே! ஆட்டுக்குட்டிகளே! நமக்குஒரு நல்ல—தகுந்த—துணைமேய்ப்பர்—கோபாலர்—ஆட்டிடையர் கிடைத்துவிட்டாரென்று அகமகிழ்ந்து அக்களியுங்கள். கத்தோலிக்க மக்களே! எழுங்கள்! ஒன்றுசேருங்கள்! நமக்கு ஒருதுணை ஆயர் கிடைத்தமைக்காக, பரலோகத்தை அண்ணாந்து பார்த்து—இருகரங்களையும் மேலாக உயர்த்தி, தேவாதிதேவனுக்குத் தோத்திரஞ் சொல்லுங்கள்! கைகுவித்துத் தலைதாழ்த்தி நன்றித்துதி செலுத்துங்கள்! மேய்ப்பருக்குரிய எல்லா நலன்களும்—வளங்களும் துணைஆயருக்குக் கிடைக்கவேண்டி முழுமனதுடன் பிரார்த்தியுங்கள்!

எம்புதிய ஆயரின்கரம் பெலன்கொண்டதுமாய், அவருடைய வலதுகை உயர்த்தப்பட்டதுமாய், நீதியும் நியாயத்தீர்ப்பும் தமது சிங்காசனத்துக்கு அஸ்திபாரமுமாயிருக்கக் கடவதாக! நம்புதிய ஆயர், தீச்செயல்களைத் திருத்துவதில் இரக்கத்தோடு கண்டிப்புள்ளவரும், கோபமின்றி நீதிசெலுத்துகிறவரும், புண்ணியஞ்செய்ய ஏவுகிறதில் மனதுகளை இளகச் செய்கிறவரும் சாந்தமாயிருந்தாலும் நீதியான சிட்சையை விடாதவருமாயிருக்கக்கடவாராக! நம்புதிய ஆயர் நம்பிக்கையும் விவேகமுமுள்ள ஞானசேனாதிபதியாய் இலங்கக்கடவாராக!

புதியஆயர் கிடைத்திருப்பதிலிருந்து, எமது கத்தோலிக்க மக்களின் சமய-சமூக-அரசியல் வாழ்க்கையில் ஒரு முன்னேற்றமான நிலைமை ஏற்படுமெனப் பூரணமாக நம்பியிருக்கிறோம். நம்புதிய ஆயர்மூலமாக சுதந்தர இலங்கையில் நமக்கு நல்லசமயசேவைசெய்ய—நம்சற்சமயத்தை விருத்திசெய்ய—பலஅரிய சந்தர்ப்பங்கள் கிடைக்குமென நம்புகிறோம். கண்ணியம்மிகுந்த ஆயரின் மதிப்புக்குரிய தலைமையின்கீழ் இதர சமூகத்தவரிடையே நாம் நல்மதிப்பும் செல்வாக்கும் பெற்று ஆனந்தமாய் வாழமுடியுமென உறுதிகொண்டிருக்கலாம். இஸ்பிரீத்துசாந்துதேவனின் பூரணநிழலில்—புதிய ஆயரின் ஆளுகையில் உலர்ந்தவைகள் நனைக்கப்படும். வணங்காதவை வணங்கவைக்கப்படும். குளிரோடிருப்பவை குளிர்போக்கப்படும். தவறினவை செவ்வையே நடத்தப்படும். இந்த ஆயரைஏற்றுப் பணிந்து நடக்கும் விசுவாசிகளுக்கு வைதீக லௌகீக சம்பத்துகளெல்லாம் கிட்டும்.


எங்கள் புதிய நல்ஆயரே! வருக!

யாழ்ப்பாணத் தமிழ்மேற்றிராணியாரே வருக! வருக! தங்களை வாழ்த்துகிறோம்! வழுத்துகிறோம்! தங்களுக்கு மனப்பூர்வமான நல்வரவு கூறுகிறோம்! வாழி! வாழி!

**பல்லாண்டு! பல்லாண்டு!! பல்லாண்டு!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மேற்றிராணியாரின் திரு அபிஷேக வைபவம்



சென்ற ஞாயிற்றுக்கிழமை எம்புதிய மேற்றிராணியாரின் அபிஷேக வைபவம் வெகு சிறப்பாகவும் புனிதமாகவும் நடந்தேறியது. சரித்திரம் கண்டிராத மகத்தான வைபவம் என்று சொல்லும்படியான இந்தச் சமயப்பெருவிழாவில் இலங்கையிலுள்ள எல்லாச் சாதி—சமயத்தவர்களும் கலந்துகொண்டனர். இப்பெரும் வைபவத்தைச் சிரகமுடிப்பதற்காக ஒருமாதகாலமாக எல்லா முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டன.

அபிஷேக நிர்வாகசபையான்து மிக ஊக்கமாக இரவு பகலாக உழைத்து வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வைத்தது. அச்சபையின் காரியதரிசியாகிய வண. ஞானசைநாதர் சுவாமியார் ஒவ்வொரு அலுவலையும் பூரணமாய்க் கவனித்து ஒழுங்குபண்ணி வைத்திருந்தார். பலகுருமாரும், எழுத்தாளர்களும் சலியாது உழைத்து வைபவத்துக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

அபிஷேக வைபவத்திற்கு முந்திய தினமே பலஇடங்களிலிருந்தும் சனங்கள் திரளாக வந்துகொண்டிருந்தனர். சென்ற சனிக்கிழமை புகையிரதத்தாலும் விமானத்தாலும் பிறவிடங்களிலிருந்து அநேகாயிரவர் வந்திறங்கினர். இலங்கையின் பிறமேற்றிராசனங்களிலிருந்து அநேக குருக்களும் சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் வந்திருந்தனர். தற்போது இலங்கையிலுள்ள எல்லா மேற்றிராணிமாரும் சமுகமளித்தனர். அமெரிக்காவுக்குச் சென்றிருக்கும் திரிகோணமலை மேற்றிராணியாரினிடமாய் அம்மேற்றிராசன பரிபாலன சுவாமியார் சமுகந்தந்தனர். இங்கு வந்திருந்த குருமாருக்கு மேற்றிராசன மாளிகையில் இடவசதி போதாமையால், சம்பத்திரிசியார் கல்லூரியிலும், கொழும்புத்துறைத் தாபனத்திலும், அயலிலுள்ள குருமார்நிவாசங்களிலும், இளவாலை அர்ச். என்றிக்கப்பர் கல்லூரியிலும் தற்காலிக இடவசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

கொழும்பு வானொலி நிலையத்தார் வெள்ளிக்கிழமை இங்குவந்து தங்கள் இயந்திரசாதனங்களை இணைத்து ஒலிபரப்புவதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்து வைத்திருந்தனர். ஆகாயவிமானப்போக்குவரத்து அதிகாரிகள் இதற்கென விசேஷ பயணஏற்பாடுகளைச் செய்து தந்தனர். அபிஷேகத்துக்கு முந்திய இருநாட்களாகப் பெருமழை பெய்துகொடுத்து தாங்கமுடியாத சூட்டைத் தணித்துக்கொண்டிருந்தது. பெருமழை பெய்துகொண்டிருந்தபோதிலும் எல்லா வெளிக்கருமங்களும், உள்வேலைகளும் துரிதமாக நடத்தப்பட்டு முடிவு செய்யப்பட்டிருந்தன. கோவிலின் நடுப்பகுதிமுழுதும் ஆசன வசதி செய்யப்பட்டிருந்தது. குருமார் கன்னியர்களுக்குப் புறம்பான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பொழுது புலர்ந்ததும் பலதிசைகளிலிருந்து கூட்டங்கூட்டமாகச் சனங்கள்வந்து குழுமிக்கொண்டிருந்தனர். பன்னூற்றுக்கணக்கான மோட்டார் வாகனங்கள் சரிந்தவண்ணமாயிருந்தன. காலை 7 மணிக்கு முன்னமேகோவிலும் கோவில்வளவும் சனத்திரளால் தேங்கி வழிந்துகொண்டிருந்தன. கூடியசனக்கும்பல் ஆரவாரித்து அபிஷேகவைபவம் எப்போது ஆரம்பமாகுமென எதிர்பார்த்திருந்தது. அவ்வேளை மன்னார் மூப்புச்சுவாமியாராகிய அதிவண. எஸ். பீற்றர் சுவாமியாரவர்களால் மேற்றிராணித்துவ அபிஷேகப் பிரசங்கம் ஒலிபெருக்கிமூலம் சொல்லப்பட்டது. 7 மணியானதும் ஆலயமணிகளெல்லாம் பேரொலிசெய்தன. சலாபத்திலிருந்து தருவிக்கப்பட்ட பாண்ட்வாத்தியம் முழங்கியது. மிகு பூசித எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள், மற்றும் மேற்றிராணிமார் குருமார் புடைசூழ மேற்றிராசன மாளிகையிலிருந்து அபிஷேக ஸ்தலத்துக்கு ஞானகெம்பீரமாக அழைத்து வரப்பட்டார். அபிஷேகபீடங்கள் மிகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பலிபீடத்தில் விசேஷமாய் அமைக்கப்பட்ட உயராசனத்தில் கொழும்பு அதிமேற்றிராணியார் அமர்ந்திருந்தனர். பீடத்தின்முன் தூத்துக்குடி மேற்றிராணியாரும் கண்டி மேற்றிராணியாரும் தத்தம் துணைக்குரவருடன் அமர்ந்திருந்தனர். எம்அரிய அருளப்பகியோமார் ஆண்டவர் அவர்கள் பிரதம அபிஷேகராய் அமர்ந்திருந்தார். காலி, சலாப மேற்றிராணிமார் உதவி அபிஷேகர்களாய் அமர்ந்திருந்தனர். எங்கள் மூப்புச்சுவாமியாராகிய அதிவண. G. A குருசாமி சுவாமியார் அவர்கள் பார்வையாளராக இருந்தார். பலிபீடத்தையடுத்துக் கீழ்ப்புறத்தில் பலபிரமுகர்களிருந்தனர். இலங்கை மகாதேசாதிபதி அவர்களின் பிரதிநிதியாக வடமாகாண அதிபதிஅவர்களும், பிரதமமந்திரி அவர்களின் பிரதிநிதியாக அவரின் நிரந்தரக்காரியதரிசி திரு. வைத்தியநாதன் அவர்களும் பிரசன்னமாயிருந்தனர். கைத்தொழில்—மீன்துறை மந்திரி கௌரவ ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்களும், தபால்-தந்தி மந்திரி கௌரவ C. சிற்றம்பலம் அவர்களும் பிரத்தியேக ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

பாப்பாசரின் கைநற்பட்டவர்த்தனர்களான திரு. எஸ். அருளானந்தம், திரு. சிற். ஏ. காடினர், திரு. W. A. E. கருணாரத்தின, திரு. I. X. பெரைரா, திரு. A. ஹாமர் என்பவர்களும் வந்திருந்தனர். கடற்றுறை முதலியார் ஞெட்றிக்கோ அவர்களுக்கும் பிரத்தியேக ஆசனமளிக்கப்பட்டிருந்தது.

பல அரசாங்கசபை அங்கத்தவர்களும், செனற்றர்களும், பிரபல உத்தியோகஸ்தர்களுமாய் எல்லாச்சமயசமூகப் பிரபலஸ்தர் பலருமாய் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரமுகர்களும் நடுக்கோவிலுக்குள்பிரசன்னமாயிருந்தனர்.

சுமார் ஐயாயிரவர்கூடிய சமுகத்தில் மேற்றிராணித்துவ வைபவம் நடைபெற்றது. நடைபெற்ற திருச்சடங்கு நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் விளக்கஞ்செய்யப்பட்டன. அபிஷேக நிகழ்ச்சிகள் பத்திரிகைகாரரால் படம் பிடிக்கப்பட்டன. நடைபெற்ற சமயச்சடங்குகளைஎல்லோரும்கூர்ந்து அவதானித்தவண்ணமாயிருந்தனர். அபிஷேகத்தின்போது ஆகாயவிமானங்கள் கோவிலைச்சுற்றித் தாழப்பறந்து வட்டமிட்டன. திருச்சடங்கு நிகழ்ச்சிகள் வானொலிநிலையத்தாரால் அஞ்சல்செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. இந்த வைபவம் நடைபெற்று முடிவுறும் வரையும், எங்கும் அமைதியும் பத்தியும் குடிகொண்டிருந்தது. அபிஷேக வைபவம் இனிதாகமுடிவுற்றதும் புதிய மேற்றிராணியார் முடிதரித்து, செங்கோல்ஏந்தி சனங்களை ஆசீர்வதித்தார். அபிஷேகம் முடிந்ததும், புதியமேற்றிராணியார், மற்றும் மேற்றிராணிமார் குருமார் புடைசூழப் பத்திச்சிறப்பான அட்டோலிக்கமாக மேற்றிராசனமாளிகைக்குப் பவனிசென்றார்.

அபிஷேக வைபவம்வரையும் மழைதுளியும் பெய்யாதிருந்தது ஒரு அதிசயமாயிருந்தது. சனங்களெல்லோரும் தத்தம் இடங்களுக்குச் சென்றதும், பெருமழைபெய்துகொடுத்தது. புதியஆயர் அபிஷேகத்தை நினைப்பூட்டி, கடவுள் கருணைமழை பொழிந்தருளினர். பகல்முழுதும் பெய்துகொண்டிருந்த மழை அன்று சாயந்தரவைபவங்களுக்கு இடைஞ்சல் உண்டாக்காமல் அற்புதமாக நின்றுவிட்டது.

பிற்பகல் 4 மணிக்கு பழையஆசனக்கோவிலிலே புதியமேற்றிராணிஆண்டவரால் நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்பு புதியஆண்டவர் அவர்களுக்கு பகிரங்கவரவேற்பு பசாரணை கொடுக்கப்பட்டது. புதியஆலயத்தில் அமைந்துள்ள உயர்மேடையில், புதிய ஆயரை மத்தியாகக்கொண்டு எல்லா மேற்றிராணிமாரும் அமர்ந்திருந்தனர். ஏராளமானகத்தோலிக்கர் குழுமியிருந்தனர். யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்கத்தலைவராகிய அப்புக்காத்து திரு. வி. யோசெவ் அவர்கள் புதிய ஆயருக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசுகையில்: புதிய ஆயரின் குடும்பச் சிறப்பு, கல்விச்சிறப்பு, ஆற்றல்வன்மை முதலியவற்றை விஸ்தரித்துக் காட்டினர். பின் பிரதமமூப்பான டக்றர் சென்யோண் [illegible]விராசசிங்க அவர்கள் புதிய ஆண்டவரை [illegible]ாழ்த்தி, கத்தோலிக்கமக்களின் சார்பாக ஒரு மோட்டர்காரத்தைத் தெட்சணையாக்கி அதன் சாவியை மேற்றிராணியாரிடம்கொடுத்தா[illegible]. சனங்களின் கட்டங்கா ஆர்ப்பரிப்புகளுக்கிடையே புதிய ஆயர் எழுந்து, தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்துக்கும், தெட்சணைக்குமாக நன்றிகூறி உங்களுக்காக இன்று நான் ஓர் புதியசீவியத்தையடைந்துள்ளேன். இதுவரை நான் ஒரு குருவாயிருந்தேன். இன்று தொடக்கம் மகாவந். கியோமார் ஆண்டவரின் உ[illegible]வியோடு உங்களுக்கு ஒரு மேய்ப்பனாகின்றேன். இன்றுமுதல் உங்களுக்கும் எனக்கும் ஒருபுதிய தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. நீங்களெல்லோரும் என்சொல்லைக் கேளுங்கள். நீங்கள் என் சொல்லைக் கேட்டு நடந்தால் நான் உங்களுக்காக எனது உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருப்பேன் என்று குறிப்பிட்டுப்பேசி எல்லோருக்கும்ஆசியீந்தார்.

[illegible]ின் சம்பத்திரிசியார் கல்லூரிமண்டபத்தில் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தாரால் பரிமளிப்பான ஓர் தேநீர்விருந்து உபசாரணை நடத்தப்பட்டது. கத்தோலிக்கரும், கத்தோலிக்கரல்லாதோருமாய் பன்னூற்றுக்கணக்கான பிரமுகர்கள் சமுகமளித்தனர். தேநீர்விருந்தின்போது கைத்தொழில்—மீன்துறை மந்திரி கௌரவ ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் பேசியபொழுது குறிப்பிட்டதாவது: "இந்த வைபவத்தில் துணைமேற்றிராணியாருக்கு எனது வாழ்த்தைத் தெரிவிக்கக்கிடைத்தது எனக்கு மிகவும் கௌரவத்தைத் தருகின்றது. அபிஷேகிக்கப்பட்டுள்ள துணைமேற்றிராணியாரும் நானும் சர்வகலாசாலையில் ஒரே வகுப்பிற்படித்தோம். இவரை அபிஷேகித்த மேற்றிராணியார்அவர்கள் சம்பத்திரிசியார்கல்லூரியில் எனது ஆசிரியராயிருந்தார். ஆகவே இந்தச் சந்தர்ப்பம் எனக்கு மிக மகிழ்ச்சியைத் தருகிறது. மிகவந். டக்றர் எமிலியானுஸ்பிள்ளையின் வாழ்க்கையையும் செயல்களையும் நான்கூர்ந்து கவனித்துவந்திருக்கிறேன். புதியமேற்றிராணியார் தேசத்துக்கும் சமயத்துக்கும் சேவைசெய்யத்தக்க திறமையும், குணநலன்களும் குறைவறக்கொண்டுள்ளவர் என்பதைத் திட்டமாய்க்கூறலாம். திருச்சபைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் மகத்தானசேவைகளைத் தொடர்ந்துசெய்யும்பொருட்டு புதிய மேற்றிராணியாருக்கு, நீடியசுகமும் கூடிய ஆயுளும் கிடைக்கவேண்டுமென யாழ்ப்பாணமக்கள் சார்பாக பிரார்த்திக்கிறேன்"

அதன்மேல் அப்புக்காத்து திரு. V. யோசெவ் அவர்கள் புதிய ஆயரின் பிறப்பு, வளர்ச்சி, ஆற்றல் முதலியவை பற்றிச் சிலாகித்துப்பேசினர்.

பின் இந்துக்கள் சார்பாக டக்றர் S. சுப்பிரமணியம் அவர்கள் பேசியதாவது: "உபமேற்றிராணியாரின் அபிஷேகச்சடங்கு யாழ்ப்பாணச் சரித்திரத்திலேயே மிக மகத்தானவைபவம். மிகவந். டக்றர் எமிலியானுஸ்பிள்ளை உப மேற்றிராணியார் பதவிக்குவந்த

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் புதிய மேற்றிராணியார்

( நவாலியூர், சோ. நடராஜன் )

விண்ணிலே விமானமூர்ந்து விசும்பெலாஞ் சுற்றிமீள்வார்
விரிகட லாழந்தாண்ட விதவித வகைகள் செய்வார்
மண்ணிலே யிருந்துவாழ வழியறி யாத மாக்கள்
வாயினல் நீதிபேசி வாளினல் முடிவு காண்பார்
எண்ணின விவையெல்லாமோர் இந்திர சாலம் போலும்
ஏதென நினைந்து பார்த்தா லிதயத்தி லீரமில்லை
கண்ணெனிற் கண்ணை வாங்கு கடித்திடும் பற்குப் பல்லு
கண்டவிப் பழைய நீதி கழிந்திடவில்லை யின்றும்!

அமலோற் பவமாய்மேரி யன்னைதன் வயிற்றிற்றோன்றி
ஆருயிர்த் துன்பமெல்லாம் அண்ணல்தன் துன்பமாக்கி
விமலோ தயமாயென்றும் விளிந்திடா வுண்மைச்சோதி
விண்ணகர் வாழ்வை மண்ணில் விரித்திடவேடங்
கொண்டான்

நிமலா லயமாம் வாழ்வின் நெறியினை யறிந்துசார்ந்து
நித்திய சத்தியத்தை நிறுத்திடத் துறவுகொண்டே
எமிலியா னஸ்பேர்பூண்டின் றுயனுய்ச் செங்கோலேற்று
யேசுவி லெங்கள்வாழ்வை யிருத்திட வாழ்ந்தாய்வாழி!

குருமணி யுலகுக்கெல்லாம் குவலயந் தானேயாக
குரிசெனு மோமத்தீயில் குளித்துல குய்யவைத்தான்
உருவிலே மனிதன்போல உண்மையிற் கடவுளானன்
உதையடி பட்டு முள்ளா முத்தம மகுடந்தாங்கி
ஒருநெறி யன்பே நெஞ்சத் துறவின லதுவுங் கிட்டும்
ஒழுகினுந் தலையிற்செந்நீர் உண்மையை மறக்கலாமோ
திருவெலா மதுவென் றுனின் திருச்சபைத் தலைவ ரானீர்
தெய்விக ஒளியைக் காட்டிச் சேவையாற் தலைமை
கொண்டீர்!

நற்றிருக் கருணை செய்வீர் ஞாலமு முமது காவல்
நன்றறி வாரெல்லாமிந் நாளது போற்றுகின்றார்
பெற்றவெம் தாயா மீழம் பெருமகிழ் வெய்து கின்றாள்
பேரருள் வழியிற் செல்லும் பெற்றியா ரெல்லா
மொன்று

கற்றவர் விளக்கே! ஞானக் கற்பக தருவே! கண்ணே!
கருத்தினல் மெய்யைக் காணும் காதலே யுடையா
ரெங்கு
நிற்பினு முண்மை யங்கே நிறைந்திடு மன்றோ பற்பல்
நெறிக்கெலா நெறியாய் நின்றான் நீள்கழல் போற்று
கின்றோம்.

(தினகரன்)

## அபிஷேகச் சங்கொலி

( ஆடுவோமேபள்ளு. எ. மெ. )

**சரணம்**

ஊதுவோமே சங்கு ஊதுவோமே—இந்த
உலகெங்கும் ஒலி செய்ய ஊதுவோமே.

**பல்லவி**

1. சத்திய மா மறை தழைத்தோங்கத்—திருச்
சபையின் போதனை சிறந்தோங்க
எத்திக்கும் புகழேந்தும் எமில் யானுஸ்—இன்று
ஏந்தல் குரவராய்த் தேர்ந்திடவே (ஊது)

2. இயாழ் நகர் பெற்றிடாப் பெரும்பேறு—எங்கள்
இதயத்திற் சுரக்குதே சுவையாறு
வாழ்வில்முன் கண்டிடா அருட்காட்சி—குரு
வள்ளல் எமிலியானுஸ் முடிஆட்சி (ஊது)

3. எத்திறத்தவர்க்குமே இன்மொழியார்—அருள்
எழிலுறப் பாயுமிரு கருவிழியார்
புத்தியிற் சிறந்தநற் தொண்டாளன்—குரு
பூபதி எமில்புகழைக் கொண்டாடி (ஊது)

4. உடல்பொரு ளாவியேசுக் குகந்தளித்தார்—தேவ
உடமையா யுலகுக்கே இதம்புரிந்தார்
கடல்தரை யாகாயம் தான்கடந்தார்—பெருங்
காரியஞ் சாதித்துமே வழிநடந்தார் (ஊது)

5. மதிமிகு விக்காராய் பணிபுரிந்தார்—ஆசார்
மனேஜர் ஜெனறலாக மனமகிழ்ந்தார்
புதிய உதவிஆண் டகையானர்—திருப்
பூம்பதம் பணிந்துமே புகழ்ந்தேற்றி (ஊது)

6. வானளாவி யெழுந்த புதுக்கோவில்—லங்கா
வடக்கிற் கொஞ்சேஞ்சித்தாய்யார் திருக்கோவில்
ஞான அரசராறு பேரிருந்து—உம்பர்
ஞாலம் புகழ முடி சூட்டினரே (ஊது)

7. சங்கை மிகுந்தகுரு சந்நியாசர்—தேவ
சந்நிதி பணிந்திடு கன்யர்கள்
துங்க கத்தோலிக்க புதல்வர்கள்—சேர்ந்து
துத்தியம் பாடமுடி சூட்டினரே (ஊது)

8. அரசவரிசை பட்ட வர்த்தனரும்—கல்வி
ஆசிரியர் மகுட வர்த்தனரும்
முரச முழங்கவெடி மணிஓசை—சேர
முதல்வ ரெனவேமுடி சூட்டினரே (ஊது)

9. நாதகீத மெக்கா ளமூதப்—பல
நறுமணங் கமழ்புது மலர்தூவ
சோதிப்ர காசவர்த்தி சுடர்தாவத்—தேவ
சுந்தர மௌலிதனைச் சூட்டினரே (ஊது)

10. சுதந்திர நாதம்எங்கும் ஒலிசெய்ய—தேசம்
சுகம்பெறத் தாகங்கொண்டு பணிசெய்ய
விதம்வித மாற்றம்காணு மிக்காலம்—நம்
வேத சுதந்திரமும் கிடைத்ததென்று (ஊது)

டானியேல் றேச்

மன்னார்,
22 — 5 — 49.

## ஸ்ரீமான் J. L. ஸ்ரனிஸ்லாஸ்பிள்ளை அவர்கள்

இலங்கைத் தேசிய சேமிப்பு இயக்க உதவிப் பிரதம நிர்வாகியாகக் கடமையாற்றிவரும் J. L ஸ்ரனிஸ்லாஸ்பிள்ளை அவர்கள் வருகிறமாதத்தொடக்கமாகத் தமது சேவையிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார் இவர் காம்பனைச் சேர்ந்தவர். உல்லட்டியா உபாத்தியாயர் என அறியப்பட்டு எல்லோராலும் மதிக்கப்பட்டுவந்தவரான ஸ்ரீமான் யேக்கப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரன். இவருக்குச் சகோதரர்கள் நால்வர். இந்நால்வரும் உலகவாழ்வைத் துறந்து, துறவற அந்தஸ்தைக் கைக்கொண்டு அதிக பிரபலியம் பெற்றுள்ளனர். கொழும்பு அதிமேற்றிராசனத்தில்தேவதொண்டாற்றி இறந்துபோன வண. கயித்தாம்பிள்ளை சுவாமியார் அவர்களும், முன் பலவருடங்களாக கொழும்பு அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரியின் அதிபராயிருந்து இளைப்பாறி, தற்போது இலங்கையிலுள்ள கிறிஸ்தியன் விறதர்மார்சபையின் பெருந்தலைவராயிருக்கிறவராகிய சங். J. லூக் விறதர் அவர்களும், தற்போது யாழ்ப்பாண முதற் தமிழ்மேற்றிராணியாராய் விளங்கும் வக்.டக்றர் J. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்களும், கொழும்பு சஞ்சூசையப்பர்கல்லூரியின் அதிபரான அதிவண. பீற்றர்பிள்ளைச்சுவாமியார் அவர்களும் ஸ்ரீமான் ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின்உடன்பிறந்த சகோதரர்களாவர். ஸ்ரீமான் ஸ்ரனிஸ்லாஸ்பிள்ளை அவர்கள் 1885-ம் ஆண்டிற்பிறந்தார். ஆகவே இவருக்குத் தற்போது 64 வயதாகின்றது. 1906-ம் ஆண்டில் அரசாங்க கிளேறிக்கல் பரீட்சையில் சித்தியெய்தி அரசினர்சேவையில் அமர்ந்தனர். சாதாரணபதவியிற் சேர்ந்து திறமையாகவும், உண்மையாகவும் சேவை புரிந்து படிப்படியாய்த் தீவிர உயர்வுற்று உன்னத பதவியையடைந்தார். 35 வருடங்களுக்குமேல் இலங்கை அரசினர் திறைசேரியில் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்துவந்தார். திறைசேரியின் பிரதம கணக்காராவுகாராகவும், நிதிநிர்வாக அதிகாரியாகவும் இருந்தபோது இவருடைய திறமையும் பொறுப்பும் பிரகாசிக்கத்தொடங்கின. அரசினராலும் கீழுத்தியோகஸ்தராலும் மிகவும் மேலாக மதிக்கப்பட்டுவந்தார். மூன்று வருடங்களின்முன் திறைசேரிப்பதவியால்விலகி, இலங்கைத்தேசியசேமிப்பு இயக்கத்தின் பிரதித்தலைவராகக் கடமையாற்றிவருகின்றார்.

இவர் திறமையானநிர்வாகி. திறமையான சேவையாளர். சமூகசேவையில் மிகபற்றுள்ளவர். ஆடம்பரமற்றவர். சிறந்த பத்திமான். சேசாருக்குரியதைச சேசாருக்கும் தேவனுக்குரியதைத் தேவனுக்கும் பூரணமாய்க் கொடுத்து மற்றவர்களுக்கு ஓர்எடுத்துக்காட்டாக விளங்குபவர்.

## திருநாள் அறிவித்தல்

இம்மாசம் 29-ந்திகதி (வைகாசி) வாழைச்சேனை அர்ச். தெரேசம்மாள் திருநாள் கொண்டாடப்படும். இப் புதியகோவிலின் 1-ம்திருநாளில் தமது பக்தர்கள் பங்குபெறும்படி அர்ச். சிறிய புஷ்பம் அன்புடன் அழைக்கின்றாள்.

வண. G. F. L. வம்பேக்சுவாமிகள்
பங்கு[illegible]

## ஆ! பிரிய சகோதரமே!

யான்நினையாத நேரத்தில் மரணம்வந்ததே

மன்னாரிலுள்ளசேவற்பதியை ஜனனபதியாகக்கொண்டு மகாகுலக் கமண்டலகுலத்துதித்தவரும், தூரசிரவணயந்திரக்கந்தோரில் வேலைபார்த்துத் தற்போது இளைப்பாறியிருப்பவருமான வி. நீக்கிலாப்பிள்ளையின் அரியஏகபுத்திரியும், மன்னார் நல்லாயன்பாடசாலையில் தொண்டாற்றும் ஆசிரியர் எஸ். செபஸ்தியாம்பிள்ளையின் மைத்துனியும், மன்னார் அவதான நிலையக் கந்தோரில் வேலைபார்க்கும் எஸ். ஆரோக்கியம் மரியதாசனின் நேசபத்தினியுமான அந்தோனியாப்பிள்ளை லூர்தம்மாளென்பவ காயாசுவாதத்தால் பீடிக்கப்பட்டுக் குணமுறாது தாம்பிரசவித்த 6-ம் நாள் தம் பத்தொன்பதாம் பராயத்தில் 10-5-49 அன்று இரவு 8-45 மணிக்கு தூய இதயத்துடன் தம தான்மாவைப் படைத்தோன்கரத்தில் ஒப்படைத்துப்பாக்கியடைந்துவிட்டா.

இவ் வாறுத்துயர சங்கதியை வாசித்தறியும் வண. குருப்பிரசாதிகளே! சங். சந்நியாசிகளே, கன்னியாஸ்திரிகளே! அருமைச் சகோதரங்களே! இவ்வாத்[illegible] இளைப்பாற்றிக்காக மன்றுடிக்கொள்ளுமாறு மிகுதாழ்மையுடனும்துயரம்நிறைந்த மனத்துடனும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிரியமனைவியைப்பிரிந்த
பத்தாவும் பிள்ளையும்

## சீனதுருமார் வரவேற்பு

பொதுவுடைமைச் செம்படையினரின் ஆதிக்கத்திலிருந்து தப்பிவெளியேறும் சீனகுருமாணவருக்குப் புகலிடம்கொடுத்து பிலிப்பைன் தீவுகளில் வசிக்கும் சீனகத்தோலிக்கமக்களிடையில் தேவஊழியம்செய்ய உதவிபுரிவதற்கு பிலிப்பைன்தீவுக் குடியரசுத் தலைவர் குவிறினே முன்வந்திருக்கிறார்.

## தத்துவ ஞானிகள் மகாநாடு

சர்வதேச தத்துவ ஞானிகள் மகாநாடு வருகிற ஆனி மாசத்தில் ஹாவாய் சர்வகலாசாலையில் நடைபெறும். இலங்கைச் சர்வகலாசாலையில் 'பாலி'பாஷை பேராசிரியரான டக்றர் ஜி. பி. மல்லசேகரா இம்மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார். பேராசிரியர் திரு. எஸ். ராதகிருஷ்ணனும், பேராசிரியர் திரு. தாஸ்குப்தாவும் இந்தியாவிலிருந்து மகாநாட்டுக்கு விஜயஞ் செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினாவிடை

— II —

## பிதாவானவர் எங்கள் தேவாதீனர்

### (3) ஏ வ ல்

61. ஏவற் பிரசாதம் ஆவது என்ன?

நாம் ஒவ்வொரு தருணத்திலும் தேவ மகிமையைத் தேட நம்மைத் தூண்டிவிடுகிறதும் சுபாவத்துக்கு மேலானதுமான தேவ உதவியே ஏவற்பிரசாதமாம்.

> "கர்த்தரின் ஊழியத்தில் வேகத்தோடு வேகமாயிருக்கின்றேன்" —3 அரசரா. XIX. 10.

62. நாம் எந்த விண்ணப்பத்தினால் பிதாவிடத்திலிருந்து ஏவற் பிரசாதத்தைக் கேட்கிறோம்?

"உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக" என்ற விண்ணப்பத்தினால் கேட்கிறோம்.

63. நமக்குப் பிரசாதத் தூண்டுதலை விட வேறு என்ன தூண்டுதல் உண்டு?

சுபாவத் தூண்டுதல் உண்டு.

64. சுபாவத் தூண்டுதல் ஆவது என்ன?

ஐம்புலன்கள் இச்சிக்கிற இன்பங்களினாலும் அவைகளுக்கு மேலான சித்தம் ஆசிக்கிற பாக்கியத்தினாலும் வருகிற தூண்டுதலே சுபாவத் தூண்டுதலாம்.

65. பிரசாதத் தூண்டுதல் நமக்கு எப்படி வருகிறது?

சருவேசுரனிடத்திலிருந்து சுபாவத்துக்கு மேலான விதமாய் வருகிறது.

66. நாம் ஈடேற்றம் அடைந்து கொள்வதற்குச் சுபாவத் தூண்டுதலின்படி சீவிக்கிறது போதுமோ?

இல்லை. நமது ஈடேற்றம் சுபாவத்துக்கு மேலானதாயிருப்பதால், சுபாவத்துக்கு மேலான பிரசாதத் தூண்டுதலின்படியே நாம் சீவிக்கவேண்டும்.

67. பிரசாதத் தூண்டுதல் சுபாவத் தூண்டுதலைக் கெடுக்கிறதோ?

இல்லை. பிரசாதத் தூண்டுதல், அல்லது ஏவற் பிரசாதம், நமது சுபாவத் தூண்டுதலைச் சுத்தமாக்கிற தொழிய அதைக் கெடுக்கிறதில்லை.

68. ஏவற் பிரசாதம் எப்படி நமது சுபாவத்தூண்டுதலைச் சுத்தமாக்கிறது?

நமது சுபாவ இன்பத்தை தேவமகிமைக்குக் கீழ்ப்படுத்தி, அந்த இன்பத்தை தேவமகிமைக்காக மாத்திரமே தேடும்படி செய்வதினாற்தான்.

> "நீங்கள் சாப்பிட்டாலும், குடித்தாலும், வேறென்னத்தைச் செய்தாலும், எல்லாவற்றையும் சருவேசுரனுடைய மகிமைக்காகச் செய்யுங்கள்"—1. கொரி. X. 31.

69. நாம் ஏன் தேவமகிமையைத் தேடவேண்டும்?

ஏனெனில், தேவமகிமைதான் நமது ஈடேற்றத்தின் நோக்கம்.

> "அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படியாய்... அவருடைய சுதந்தரமாக அவருக்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம்"— எ. பே. I. 11—12.

70. சருவேசுரனுடைய மகிமையைத் தேடினால் நாம் ஆசிக்கிற பாக்கியத்தையும் அடையலாமா?

ஆம். சருவேசுரனை மகிமைப்படுத்துவதினால் இவ்வுலகில் உண்மையான ஆறுதலையும் மறுஉலகில் பூரண பாக்கியத்தையும் அடைந்துகொள்ளலாம்.

> "சருவேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்தமுந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்"—மத். VI. 33.

71. நமது சீவியக் கிரியைகளின் நோக்கம் ஒன்றுதானா?

எல்லாக் கிரியைகளுக்கும் பொதுவான தேவமகிமை யென்னும் கடைசி நோக்கம் ஒன்றுதான். ஆனால் ஒவ்வொரு கிரியைக்கும் ஒருவிசேஷ கிட்டின நோக்கமுமுண்டு.

72. நாம் கடைசி நோக்கத்தோடு கிட்டின நோக்கங்களையும் கருதலாமா?

ஆம். நாம் கடைசிநோக்கமாகிய தேவமகிமையைப் பொதுவாய்க் கருதிக்கொண்டு பாவமில்லாத வேறு எந்த நோக்கங்களையும் கருதிக்கொள்ளலாம்.

73. நாம் தகாத கருத்துடன் செய்கிற கிரியை என்னவாகும்?

நாம் தகாதகருத்துடன் நற்கிரியைச் செய்தாலும் அது பாவமாகும்.

> "நீங்கள் மனிதரால் காணப்படும் பொருட்டு...உங்கள் தர்மக் கிரியைகளைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; இல்லாவிட்டால் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் சம்பாவனை அடையமாட்டீர்கள்"— மத். VI. 1.

74. நாம் ஒரு கிரியையை நற்கருத்துடனும் தகாத கருத்துடனும் செய்தால் அது என்னவாகும்?

தகாத கருத்து கனங்கொண்டதென்றால் முழுக்கிரியையும் பாவமாகும். ஆனால் அக்கருத்து அற்பமானதென்றால் கிரியை முழுதும் பாவமாகாது.

75. தருணக் கருத்திற்கும் வழக்கக் கருத்திற்கும் இடையில் வித்தியாசம் என்ன?

நாம் ஒரு கிரியையைச் செய்யும் வேளையிலே எண்ணுகிறகருத்துத்தான் தருணக் கருத்து. கிரியையைச் செய்ய முதல்எண்ணி அதைச் செய்யும் வேளை மட்டும் தள்ளிவிடாத கருத்துத்தான் வழக்கக் கருத்து. இவ்விரு கருத்துகளிலும் தருணக்கருத்துதான் நமக்குக் கூடிய ஊக்கத்தைத் தரும்.

76. தெளிவான கருத்திற்கும் தொகுப்பான கருத்திற்குமிடையில் வித்தியாசம் என்ன?

நேரே எண்ணப்படுகிற கருத்துத்தான் தெளிவான கருத்து. நேரே எண்ணப்படாமல் வேறு கருத்திலே எண்ணப்படுகிற கருத்துத்தான் தொகுப்பான கருத்து. இவ்விருகருத்துகளிலும் தெளிவான கருத்துத்தான் நமக்குக் கூடிய ஊக்கத்தைத் தரும்.

77. நேரேகருதாத தகாத ஒருகாரியத்திற்கு நாம் செய்யும்கிரியை காரணமாயிருந்தால் அந்தக் காரியத்திற்கு நாம் பொறுப்பாளிகளா?

அத்தகாதகாரியம் வருமென்று அறிந்தும், அதைத்தடுக்கக் கடமையாயும் அதன் காரணமாகிய கிரியையைச் செய்யாமல்விட இயலுமாயுமிருந்தால் நாம் பொறுப்பாளிகள்தான்.

78. நாம் தகாதகாரியம் ஒன்றைக் கருதிக்கொண்டபின் அதைச் செய்யாமல்விட்டால் நாம் பாவவாளிகளா?

ஆம். நாம் பாவத்தைச் செய்து முடிக்காவிட்டாலும், அதை விரும்புவதும், அதை நினைத்துச் சந்தோஷிப்பதும், அதைப்பற்றி விருப்பத்துடன் கதைப்பதும், அதன் சமயங்களில் மனம்பொருந்தி இருப்பதும் பாவமாகும்.


---

## வறியவர்களின் அங்கத்தவர்

பரிசுத்த வருடத் திருயாத்திரைக் காரியநிர்வாகசபையார் உலகமடங்களிலுமுள்ள ஒவ்வொரு விசாரணைப்பங்கிலுமிருந்து வறியவர்களின் பிரதிநிதியாக ஒருவர் பரிசுத்தவருடக்கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதற்கு ரோமைநகருக்குச் செல்லக்கூடிய ஓர் திட்டத்தை வகுத்துவருகிறார்கள்.

---

—திரு.ஜோர்ஜ் பேர்னாட்ஷோ,என்பவர் பண்டிதநேரு ஆசியாவில் மிகச் சிறந்த ஓர்அரசியல்ஞானி என்ற தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளார். அவரது அபிப்பிராயம் திரு. லோன்ஸ்ரீன் என்பவர்மூலமாக இந்தியப்பத்திரிகையாளரான திரு. பி. டி. தாண்டன் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஊக்கமழிந்து
உறங்கி விழாதீர்—
நெஸ்டோமோல்ட் அருந்துக.

களைத்துப்போனவர்கள்; ஊக்கமிழந்தவர்கள்; நரம்புச் சோர்வடைவார்கள்; பொதுவாக உற்சாகம் குறைந்து தளர்ச்சியுற்றவர்கள் அனைவரும் நெஸ்டோமோல்ட்டும், பாலும் அருந்துவதின்மூலம் அநேகமாகப் பயன்பெறலாம். நெஸ்டோமோல்ட் சேர்த்துக் கொண்டால் பால் அருந்துவதற்கு ருசிகரமாயிருக்கும். நீங்களும் இதை அருந்திப் பார்க்கலாமே?




# நெஸ்டோமோல்ட்

என்பது நேஸில்ஸ் மோல்டெட் மில்க்கின் புதிய பெயர்.

எல்லா ஸ்டோர்களிலும்
கூட்டுறவு பண்டகசாலையிலும் கிடைக்கும்.


## முன்னேற்றசங்க
## முதல் விழா
### வஞ்சியங்குளம்

நறுவிலிக்குளப்பகுதிக் கிராமமுன்னேற்ற சங்கம் சென்ற 9-ந்திகதி முற்பகல் 9-30 மணிமுதல் வஞ்சியங்குளம் கத்தோலிக்க பாடசாலையில் மன்னார் உதவி ஏசன்றர் ஆர். எல். ஆர்னொல்டா அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடந்தேறியது. ஆரம்பத்தில் தலைவர்அவர்கள் அப்பகுதிக் கிராமவிதானை திரு. அ. மாதடிமை, அக்கிராசனர் திரு. லோ. வி. ஜெயரெட்டனம், திரு. அ. சீமான் என்பவர்களால் கண்ணியத்துடன் வரவேற்கப்பட்டு, ஆசிரியர் திரு. பீரிஸ் என்பவரால் மாலை சூட்டப்பட்டார். அப்பால் உதவி ஏசன்றராலும், அவருடன் சமுகம் அளித்த திரு. சுப்பிரமணியம் அவர்களாலும் கிராமமுன்னேற்ற சம்பந்தமான சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின் மாதர் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் அக்கிராசனராக ஸ்ரீமதி எல். எஸ். புவனேஸ்வரி அம்மாளும், காரியதரிசியாக ஸ்ரீமதி அக்கினேஸ் பீரிஸ் அம்மாளும், தனாதிகாரியாக அப்பகுதிக் கிராம விதானையாரின் பாரியாரும் தெரிந்தெடுக்கப்பட்டனர். அதன்பின் தலைவர் அவர்களிடம் இப்பகுதிக்கு ஓர்வாசிகசாலையும், ஒருமருத்துவமாதும், நறுவிலிக்குளத்திலிருந்து வஞ்சியங்குளப்பாடசாலைக்குச் செல்லும் பாதையும் அமைத்துத்தரப்படல் வேண்டுமென்றுகேட்கப்பட்டது. ஈற்றில் அச்சன்குளம் திரு. லோ.வி. ஜெயரெட்டனம் அவர்களின் நன்றிஉரையுடன் விழா முடிபெய்தியது.

லோ. வி. ஜெயரேட்டனம்


## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலுள்ள பின்னாற் குறிக்கப்படும் வேலைகளைச் செய்வதற்கு வடமாகாண ஏசண்டரவர்கள் 1949-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந்திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

1. வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூரிலுள்ள காவலோடை வாய்க்கால் திருத்துவதும் ஒரு இரண்டுகல் கொங்கிறீற் அணை கட்டுவதும்.
2. வலிகாமம் மேற்குப்பகுதி சுளிபுரத்திலுள்ள வயிரமணிவாய்க்காலும் கட்டுந் திருத்துவது.
3. வலிகாமம் மேற்குப்பகுதி சுளிபுரத்திலுள்ள புன்னாலை—தொல்புரம் வயல்களுக்கு ஏழுகொங்கிறீற் தலைகள் கட்டுவது.
4. வலிகாமம் மேற்குப்பகுதி சுளிபுரத்திலுள்ள புன்னாலை—மூளாய்வயல்களுக்கு ஏழு கொங்கிறீற் தலைகள் கட்டுவது.
5. வலிகாமம் மேற்குப்பகுதி நவாலி தெற்கிலுள்ளவேடுவன்கண்டிவாய்க்காற்கட்டு பெலப்படுத்துவதும் ஒரு இரண்டுகல் கொங்கிறீற் அணைகட்டுவதும்.

2. மேற்சொன்ன ஒவ்வொரு வேலைக்கும் பிறம்புபிறம்பாக விண்ணப்பஞ் செய்யவேண்டும். குறித்த விண்ணப்பப்பத்திரங்கள்ரூபா இருபத்தைந்து கச்சேரியிற்கட்டி வடமாகாணஏசண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு பத்திரமாக 1949-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந்திகதி சனிக்கிழமைபகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்களை வடமாகாண ஏசண்டரிடம் பெற்றுக் கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு அபிஷேக வைபவம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முதற் தமிழராவர். இதுவரை யாழ்ப்பாண மக்கள் சட்டம், வைத்தியம், அரசியல்துறை என்பவற்றில் மிகமுன்னேறிப் பெருமையடைந்துள்ளனர். இப்போது யாழ்ப்பாணத் தமிழராக எங்களுடைய சொந்த இரத்தமுள்ள மிகவந்தனைக்குரிய டக்றர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களைக் கத்தோலிக்க மேற்றிராணியாராக்கியுள்ளோம். மகிமையானது சேரவேண்டியவருக்கே சேர்ந்திருக்கிறது. துணை மேற்றிராணியார் எங்களில் ஒருவர். அவருக்குத் தெரிவிக்கும் மகிழ்ச்சி எங்களுக்கும் சேரும். புதிய மேற்றிராணியார் தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுமே முதன்முதலில் தேடவேண்டுமென்பதில் திடமான நம்பிக்கையுள்ளவர். மிகவந். டக்றர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களைத் திருச்சபை உன்னதபதவிக்கு உயர்த்தியதையிட்டு எனதுமகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.''

அதனைத்தொடர்ந்து கத்தோலிக்கரல்லாத கிறீஸ்தவர்களின் சார்பாக யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி குணம்ஸ்பென்சர் பேசியபோது: "மிகவந். டக்றர் எமிலியானுஸ்பிள்ளையின் வாழ்க்கையிலும் திருச்சபைச் சரித்திரத்திலும் இது முக்கியமான நாள். கத்தோலிக்கருக்கு மாத்திரமல்ல ஏனைய கிறீஸ்தவர்களுக்கும் இது சந்தோஷகரமான நாளாகும். இவருடன் நான் சர்வகலாசாலையிற் படித்திருக்கிறேன். இவர் தமக்கு இயல்பாயுள்ள சிறந்த விவேகத்தினாலும், ஆத்மீக ஞானத்தாலும், தாழ்ச்சி, தியாகம், அன்பு இவைகளினாலும் கத்தோலிக்கர் அல்லாதவர்களாலும் மிகுதியும் விரும்பப்படுகிறார்'' என்று குறிப்பிட்டார்.

பின் யாழ்ப்பாண நகரசபை மேயர் திரு. சாம்சபாபதி அவர்கள் தமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்தபோது, தேசத்தைப்போலவே திருச்சபையும் நடைபெறுகிறது. தேசத்தைப் பொறுத்தமட்டில் நாம் சுய ஆட்சிபெற்று எங்கள் தகுதியைக் காட்டிவிட்டோம். யாழ்ப்பாணத் திருச்சபையிலும் தாங்களே தங்கள் அலுவல்களைப்பார்க்கக்கூடியவர் என்பதை இந்தத் தமிழ் மேற்றிராணியாரின் அபிஷேகம் குறித்துக்காட்டுகின்றது. நான் மேயர் என்ற பதவியில் நகரபரிபாலன சங்கத்தின் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறேன் எனக்குறிப்பிட்டார்.

அதன்பின் சிங்களமக்கள் சார்பாக, இலங்கைச் சர்வகலாசாலைப் போாசிரியர் செவாலியர் W. A. E. கருணரத்ன என்பவர் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "புதிய மேற்றிராணியாரையும் அவரது குடும்பத்தினரையும்பற்றி நெடுங்காலமாக எனக்குத் தெரியும். இவர்களில் ஒவ்வொருவரும் தென்பகுதிச் சிங்களர்களாலும் மற்றும் சமூகத்தவராலும் மதிக்கவும் நேசிக்கவும்பட்டவர்கள். தமது கல்வி பயிற்சி ஆகியவைகளின் காரணமாகப் புதிய மேற்றிராணியார் தமது உயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்."

ஈற்றில் புதிய மேற்றிராணியார், தமக்களிக்கப்பட்ட மரியாதைக்கு நன்றிகூறிப் பின்வருமாறு குறிப்பிட்டார். "தமிழரின் தலைநகராகிய யாழ்ப்பாணத்துக்கு நான் துணைமேற்றிராணியாராக நியமிக்கப்பட்டதில் பெருமையடைகின்றேன். நான் ஓர் மேற்றிராணியார் என்றமுறையில் மக்களுக்குச் சேவைபுரிவதே எனதுபணியாக இருக்கிறதென்பதை உணருகிறேன். 1949-ம் ஆண்டு வைகாசிமாசம் 22-ந் திகதி எனக்கு ஒருபுதிய வாழ்க்கையையும் மக்களோடு எனக்கு ஒருபுதிய உறவையும் ஆக்கிவிட்டிருக்கிறது. பல்வேறு சமூகங்களைச்சேர்ந்தவர்களெல்லோருடையவும் நன்மையைக்கோரி உழைப்பேனெனத் தெரிவிக்கின்றேன். திருச்சபையினுடையவும் நாட்டினுடையவும் சேமத்துக்காக உழைப்பதற்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்குமாறு உங்களெல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

---

### கர்த்தர் பரலோகத்திற்கு எழுந். திருநாளு. பின்வரும் ஞாயிறு

#### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 15 : 26, 27 & 16 : 1—4)

அக்காலத்தில் யேசுநாதர் தமது சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: பிதாவினிடத்தினின்று நான் உங்களுக்கு அனுப்பவிருக்கிறவரும், பிதாவினிடத்தினின்று புறப்படுகிற சத்தியத்தின் இஸ்பிரீத்துசாந்துவானவருமாகிய தேற்றுகிறவர் வரும்போது என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுவார். நீங்களும் துவக்கமுதல் என்னோடிருக்கிறதினால் சாட்சி சொல்லுவீர்கள். நீங்கள் இடறல்படாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உங்களைச் செபக்கூடங்களுக்குப் புறம்பாக்குவார்கள். அன்றியும் உங்களைக் கொலைசெய்கிற எவனும், தான் சர்வேசுரனைச் சேவிக்கிறதாக நினைக்குங்காலம் வருகின்றது. பிதாவையும் என்னையும் அவர்கள் அறியாததினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். ஆனால் அந்நேரம் வரும்போது நான் இவைகளை உங்களுக்கு வசனித்தேனென்று நீங்கள் நினைத்துக்கொள்ளும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். ஆனி மாதம் பின்வரும் தேதிகளில் சகோதரர்கள் பரிபூரணபலன்களை அடையலாம்:—1, 2, 3, 12, 13, 16, 20 (2), 24(2), 29. நிபந்தனைகள்:—பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணைபெறல், ஆசனக்கோவிலைச் சந்தித்தல், அர்ச். பாப்பானவருடைய கருத்துகளுக்காக மன்றாடல், பின்வரும் தேதிகளில் பொதுப்பாவமன்னிப்பு இருக்கும்:—5, 12, 16, 24, 29.

A. S. FRANCIS OF MARY
for Director.


## திருச்சுரூபங்கள்! — — திருச்சுரூபங்கள்!!

### ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்டன.

அழகும் உறுதியும் உள்ளனவாய், கவர்ச்சிமிக்க நிறங்கொண்டனவாயுள்ள

### கிறீஸ்து இராசா சுரூபங்களும் இருதய ஆண்டவர் சுரூபங்களும்

விற்பனைக்கிருக்கின்றன.

விலை: 12 இஞ்சி ரூ. 15/- 16 இஞ்சி ரூ. 25/-
20 இஞ்சி ரூ. 35/- 24 இஞ்சி ரூ. 55/-

பார்சல் செலவு பிரத்தியேகம்

பழைய சுரூபங்களுக்கும் வர்ணம் தீட்டிக்கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு எழுதவும்

**தோமஸ் றெட்றிக்கோ அன் சன்ஸ்,**
சுரூப இறக்குமதியாளர்,
கொழும்பு 13.

Phone: 3489 — T'grams: "Religart"



## அர்ச், மரியன்னைக் கல்லூரி

தூத்துக்குடி

**(ST. MARY'S COLLEGE, FOR WOMEN, TUTICORIN)**

மேன்மைதங்கிய கபிரியேல் பிரான்சீஸ் திபூர்சியுஸ் ரோச் ஆண்டவரவர்களின் ஆதரவில் நடைபெற்றது.

✻

இண்டர்மீடியட் ஜூனியர், சீனியர் வகுப்புகள் நடைபெறும்.

பாடத் திட்டங்கள் :
ஆங்கிலம், தமிழ் மூன்றாவது குரூப்பில் கிரேக்க, ரோம சரித்திரங்களும் ஆங்கில சரிதமும், லாஜிக்கும் போதிக்கப்படுகின்றன.

✻

காலேஜ் கம்பவுண்டில் கன்னியர் பராமரிப்பில் ஒரு ஹாஸ்டலும் உண்டு.
இடவசதிக்கு முன்னதாக எழுதவும்.

மானேஜர்,
அர்ச். மரியன்னைக் கல்லூரி, தூத்துக்குடி.


### ஆயுர்வேத வைத்தியகலாசாலை

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கா ஆயுர்வேத கலாசாலை கோடைகாலவிடுமுறையின்பின் சென்ற 16-ந்திகதி திரும்பவும் திறக்கப்பட்டிருக்கிறது. இக்கலாசாலையிற்சேர்ந்து வைத்தியம் பயில விரும்புபவர்கள் கல்லூரித் தலைவருக்கு, வரும் ஆனிமாதம் முதலாந்திகதிக்குமுன் விண்ணப்பிக்கலாம். தமிழ் அல்லது ஆங்கிலத்தில் J. S. C. வகுப்பிற் படித்தவர்கள் எல்லோரும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள்.

### குருடர், செவிடர் பாடசாலை

ருகம கொடிவிற்பனை நாள்—ருகமத்திலுள்ள அர்ச். சூசையப்பர் குருடர், செவிடர் பாடசாலைக்கு நிதிதிரட்டுவதற்காகப் பாடசாலைகளில் ஆனிமாசம் 8-ந்திகதியும், கோவில்களில் ஆனி மாசம் 10-ந்திகதியும் கொடிவிற்பனை செய்யப்படும். எல்லோரும் இதை ஆதரிப்பார்களாக.

சுவாமி J. B. கிறகோரி O. M. I.
கொழும்பு.


## வேத புஸ்தகங்கள்

| | |
|---|---|
| சத்தியவேத சித்திரவிளக்கம் | 5-50 |
| யேசுநாதர் அன்பின் அரசர் | 2-00 |
| ஞானசமுத்திரம் | 7-50 |
| பங்கிராஸ் சரித்திரம் | 4-00 |
| மரியாயின் வல்லபம் | 2-75 |
| இல்லற உத்தியானம் | 2-75 |
| திக்கற்ற தையல் | 1-75 |
| கன்னி அல்போன்சா | -40 |

**தாமஸ்ரொட்றீகோ அன்சன்ஸ்,**
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.



## பள்ளிக்கூடப் புஸ்தகங்கள் என்றால்,

ம. வஸ்தியாம்பிள்ளை அன்சன்ஸ்
உங்கள் தேவைக்கு வேண்டியவைகளைத்தரத் தயாராயிருக்கின்றனர்.

இலங்கையிலுள்ள பிரபல பள்ளிக்கூடப் புஸ்தகங்களும் உபகரணங்களும், கத்தோலிக்க வேதஞான நூல்கள், செபப்புஸ்தகங்கள், செபமாலை, குருசு, சுரூபம் முதலியனவும் பெறக்கூடிய முதன்மையான இடம்.

பெரியதெரு, — யாழ்ப்பாணம்.
Phone 95.


### யூததலைவரும் பாப்பரசரும்

ஆர்ஜென்டீனநாட்டு இஸ்ரவேலரின் கூட்டத்துத் தலைவரான சூஜர்மாற்சூற் என்பவரையும் ஸ்பெயின்தேசத்து ஜேவியர் மாற்றினேயையும் அவர்களது மனைவிமாரையும் ஓர்தரிசனத்துக்கு வரவேற்று ஒருமணிநேரம் பரிசுத்தபாப்பரசர் அவர்களோடு சம்பாஷித்தனர்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residin at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 26 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org